**சுருக்கம்**

பள்ளிக் கல்வி -அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியரல்லாப் பணியிடங்களை நிரப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (டி2) துறை**

அரசாணை (நிலை) எண். 115
நாள் 30-5-2007

படிக்கப்பட்டவை

1) பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6 கடிதம் நக எண். 30072/டி1(4) /06 நாள் 11.12.2006 மற்றும் 71599 / டி(இ4)/99, நாள் 16.4.2007

2) அரசாணை (1டி) எண்.37, பள்ளிக் கல்வித் துறை, நாள் 8.2.2007

----

ஆணை :-

பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியரல்லாப் பணியிடங்களை நிரப்புவதற்கு கீழ்க்குறிப்பிட்டவாறு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

(i) காலியாக உள்ள அனைத்து இளநிலை உதவியாளர் பணியிடங்களையும் நிரப்பலாம்.

(ii) காலியாக உள்ள காவலர் பணியிடங்களில், 50% பணியிடங்களை தனியார் முகமை மூலம் (outsourcing) TEXCO மூலம் நிரப்பலாம்.

(iii) காலியாக உள்ள அனைத்து துப்புரவாளர் மற்றும் பெருக்குபவர் பணியிடங்களையும் தனியார் முகமை (outsourcing) மூலம் நிரப்பலாம்.

(iv) காலியாக உள்ள தோட்டக்காரர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பணியிடங்களை நிரப்பத் தேவையில்லை.

(v) காலியாக உள்ள அனைத்து அலுவலக உதவியாளர் பணியிடங்களில், 50% பணியிடங்களை நிரப்பலாம். மீதியுள்ள பணியிடங்களை மறு ஆய்வு செய்தபின் நிரப்பலாம்.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மாநிலத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியரல்லாத பணியிடங்களில் கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

| பணியிடம் | காலிப்பணியிடங்கள் |
|---|---|
| இளநிலை உதவியாளர் | 164 |
| அலுவலக உதவியாளர் | 281 |
| காவலர் | 176 |
| துப்புரவாளர் | 29 |
| பெருக்குபவர் | 40 |
| துப்புரவாளர் மற்றும் பெருக்குபவர் | 7 |

3. இந்நிலையில், மேலே பத்தி 1ல் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியரல்லாப் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில், அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியரல்லாப் பணியிடங்களையும் அதே போன்று நிரப்பிட, கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது :-

I. அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது காலியாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள 164 இளநிலை உதவியாளர் பணியிடங்களையும் நிரப்பிடலாம்.

II. அலுவலக உதவியாளர் பணியிடங்களைப் பொறுத்தவரை, மொத்த காலிப் பணியிடங்களாக தெரிவிக்கப்பட்டுள்ள 281 பணியிடங்களில் 50 சதவிகித பணியிடங்களை அதாவது 140 பணியிடங்களை மட்டும் நிரப்பிட தற்போது அனுமதி அளிக்கப்படுகிறது. அவ்வாறு நிரப்பும்போது, அப்பணியிடங்களில், தற்போது பின்பற்றப்படும் விதிமுறைகளின்படி மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில், தகுதியுள்ள பணியிடங்களின் எண்ணிக்கையினை முதலில் நிர்ணயம் செய்து, அத்தகைய பணியிடங்கள் 140-க்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவற்றுள் முதலில் காலியேற்பட்ட 140 பணியிடங்களை நிரப்பிடலாம்

III. நிரப்பப்பட வேண்டிய காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் துப்புரவாளர் (ம) பெருக்குபவர் ஆகிய பணியிடங்களைப் பொறுத்தவரை, அரசு பள்ளிகளைப் போல் உதவிபெறும் பள்ளிகளிலும், இதற்கான செலவினை அந்தந்தப் பள்ளிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இப்பணியிடங்களை வெளியாட்களைக் கொண்டு (on outsourcing)நிரப்பிடலாம்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.1430 / FS / P / 07 நாள் 27/4/2007-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை-15.

நகல்

நிதித் (கல்வி.II) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்